MR. SPEAKER : சீக்கிரமே 10 மணி ஆகப்போகிறது. இன்னும் 5 கேள்விகள் இருக்கின்றன. இனிமேல் ஒவ்வொரு கேள்விக்கும் ஒரே ஒரு உப கேள்வி அனுமதிக்கிறேன். மூலக் கேள்வியைப் போட்டவரை அந்த உப கேள்வியைப் போட அனுமதிக்கிறேன்.

Increase in the yield of paddy through Nathaswaram

* 849 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நாதசுவர வாத்தியத்தின் மூலம் நெல் மகசூலை அதிகரிக்கும் நூதன வழியை கண்டுபிடித்துள்ளதாக சொல்லப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) சர்க்காரின் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : சிதம்பரத்திலுள்ள கல்லூரியில் இந்த முறை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது சர்க்காருக்கு ஏன் தெரியவில்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிதம்பரத்திலுள்ளவர்கள் இந்த ஆராய்ச்சியைச் செய்திருக்கிறார்கள் என்ற செய்தியைப் பத்திரிகையில் கனம் அங்கத்தினர் பார்த்துவிட்டுத்தான், இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். பத்திரிகைகளில் வரும் செய்தியை பார்த்துவிட்டு சர்க்கார் நடவடிக்கை எடுக்க முடியாது.

Key Village Centre for Udaiyarpalaiyam

MR. SPEAKER : As the hon. Member Sri K. R. Viswanathan is absent, the question and answer will be printed in the Official Proceedings.

* 850 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Key Village Centre at Udaiyarpalaiyam taluk, Tiruchirappalli district; and

(*b*) the cost of maintaining a Key Village Centre?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Rs. 45,200 non-recurring and Rs. 35,000 recurring.

Godowns for the storage of foodgrains

* 851 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

உணவுத் தான்யங்களைச் சேமித்துவைப்பதற்கான கிடங்குகள் எந்தெந்த இடங்களிலே இருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix VIII on pages 589–594 *infra*.